1973 ஆகஸ்ட் 4]

THIRU K. S. KOTHANDARAMIAH: There were some freedom fighters in Dharmapuri district who courted imprisonment during freedom struggle. The details of their activities have not been collected so far. May I know from the Hon. Chief Minister whether such details may be sent now for inclusion in "Who is Who"?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதல் தொகுதியில் மூன்றாவதாக தருமபுரியும் இடம் பெறுகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுடைய பெயர்களைத் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகத் தொகுத்திருப்பதைப்போல் அகில இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது தொகுத்திருக்கிறார்களா? அப்படியென்றால், அதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது அகில இந்திய ரீதியில் எல்லா மாநிலங்களிலும் தொகுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் முதலில் மத்திய சர்க்கார் 1962 ஆம் ஆண்டு இதுபற்றிய அறிக்கையை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியதாகத் தெரிகிறது. 1962 ஆம் ஆண்டில் அறிக்கை கிடைத்து, 1964 ஆம் ஆண்டில் குழு அமைக்கப்பட்டது. இதைப் போலவே மற்ற மாநிலங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கக் கூடும்.

Escape of under-trials from police escorts

*2 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of under-trials have escaped from the hands of police escorts about 30th November 1972 near Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) சட்டப் பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 3—8—1973 அன்று மேசை மீது வைக்கப்பட்ட தமிழ் அறிக்கை முதலமைச்சரவர்களால் பேரவையில் படிக்கப்பட்டது.

இவ்வறிக்கையின் ஆங்கில மொழிபெயர்ப்பு 247-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : பொலிடிகல் பிரிசினர்ஸுக்கான செக்யூரிடி மெஷர்ஸைத் தளர்த்தி, க்ரிமினல் பிரிசினர்ஸுக்கான செக்யூரிடி மெஷர்ஸை அதிகப்படுத்த அரசு முன்வருமா? இந்தக் கைதிகளைப் பறி கொடுத்த காவலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிரிமினல் குற்றவாளிகளுக்கான இதுபோன்ற பாதுகாப்புகள்—அவர்கள் ஓடிவிடாமல் இருப்பது போன்ற தடுப்பு முயற்சிகளில் ஈடுபடுவதற்குக் காவல் துறையினர் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்று சொல்லாமலேயே விதிகள் இருக்கின்றன. ஆயினும், எதிர்பாராத முறையில் அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற காவல் துறையினர்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, விவர அறிக்கை கொடுத்திருப்பதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேசைமீது விவர அறிக்கை இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்குரிய விவர அறிக்கை நேற்றே மேசைமீது வைக்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவர அறிக்கை சிறியதுதான். படித்து விடுகிறேன். இ.பி.கோ. 393, 397, 414 ஆவது பிரிவுகளின்கீழ் அரக்கோணம் இரயில்வே காவல் நிலையம் தொடர்ந்த வழக்கு சம்பந்தப்பட்ட 5 விசாரணைக் கைதிகள் திருவள்ளூர் சப்-மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்திலிருந்து சென்னை மத்திய சிறைச்சாலைக்குப் பேருந்துமூலமாக அழைத்து வரப்பட்டனர். வழியில் வில்லிவாக்கம் அருகில் பேருந்து வரும்போது, கைதிகளில் ஒருவன் மலம் கழிக்க விரும்புவதாகக் கூறினான். பாதுகாப்புக் காவலர்கள் இருவரும் அவர்களைத் திறந்த வெளிக்கு அழைத்துச் சென்றனர். அப்போது, அவர்கள் காவலர்கள் முகத்தில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு, துப்பாக்கி முனையிலுள்ள கத்தியைப் பிடுங்கி, ஒரு காவலரை பலமாகத் தாக்கினர். மற்றொரு கைதி இன்னொரு காவலரின்

1973 ஆகஸ்ட் 4]

துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டான். கத்தியுடனும், துப்பாக்கியுடனும் அவர்கள் அனைவரும் தப்பிவிட்டனர். காவலர் ஒருவர் அம்பத்தூர் காவல் நிலையத்தை அடைந்து தகவல் தெரிவித்தார். குற்றம் சாட்டப்பட்ட கைதிகள் அனைவரும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ஐந்து கைதிகளில் ராமாராவ் என்ற கைதி 11—2—1973 அன்று கைது செய்யப்பட்டு, அவனிடமிருந்து துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. மற்ற கைதிகளைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்காக சென்னை மாநகரக் காவலர், இரயில்வே காவலர், குற்றப் புலனாய்வுத் துறைக் காவலர் ஆகியோர் முனைந்து முயற்சி செய்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி நேற்று வர வேண்டிய கேள்வி. ஆகவே, நேற்றே ஸ்டேட்மென்ட் வைத்திருக்கிறார்கள். இன்றல்ல—நேற்றே மேஜைமீது வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இப்படி ஓடிப்போன கைதிகளில் யாராவது நக்சலைட் இயக்கத்தில் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா, அது சம்பந்தமாக ஏதேனும் விவரம் இருக்கிறதா, அவர்களைத் திரும்பவும் காவலர் கைது செய்து விட்டனரா என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் நக்சலைட்டா என்ற விவரம் கிடையாது. அவர்கள் கொள்ளையடித்ததாக அரக்கோணம் இரயில்வே காவல் நிலையத்தாரால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்று ஏற்கெனவே தெரிவித்தேன். தப்பிச் சென்றவர்களில் ராமாராவ் என்பவர் 11—2—1973 அன்று கைது செய்யப்பட்டு அவனிடமிருந்த துப்பாக்கியும் கைப்பற்றப் பட்டது என்றும் ஏற்கெனவே படித்த விவர அறிக்கையில் சொல்லியிருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், கைதிகள் காவலர் பாதுகாப்பில் இருக்கிறபோது, அவர்களுக்கு மிளகாய்ப் பொடி எப்படிக் கிடைத்தது என்ற விவரத்தைக் கூற முடியுமா ? (சிரிப்பு)

[1973 ஆகஸ்ட் 4

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பழமொழி சொல்லுவார்கள், "கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு ஓடிவிட்டார்கள்" என்று அவர்களுக்கு எப்படி மிளகாய்ப் பொடி கிடைத்தது என்பதுபற்றி இப்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலிருந்து அந்த 5 குற்றவாளிகளும் கொள்ளையடித்த பயங்கரமான குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த 5 பேர்களை எத்தனை காவலர்கள் கொண்டுபோனார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஆரம்பத்திலேயே சொல்லி இருக்கிறேன். எத்தனை காவலர்கள் அழைத்துச் சென்றார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஐந்து கைதிகளை அழைத்துச் செல்லப் போதுமான காவலர்கள் இருந்தாலும், அவர்களிடமிருந்து துப்பாக்கியைத் திடீரென்று பிடுங்கிக்கொண்டதால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

Building for International Institute of Tamil Studies

* 3. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have allotted any plot of land for raising the construction of the International Institute of Tamil Studies; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட உரிய இடத்தில் நிலத்தை ஒதுக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

THIRU N DENNIS : May I know whether experts in the language from other countries also would be invited to make their contributions?